# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 342/2025** |
| Prosecution witness | : | P.W. 6 (Additional Witness) |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | மகாலிங்கம் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் காவல் நிலையம் |
| Age | : | 52 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. A1, A2, A4 present. A3 absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான காவல் ஆய்வாளர்கள் திரு. கருணாநிதி மற்றும் திரு. ராஜ் என்பவர் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி ஆகியோர்கள் தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளதாலும், காவல் ஆய்வாளர் திரு.ராஜ் என்பவர் தற்போது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும், மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 05.11.2021 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது குடவாசல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த வாஞ்சிநாதன் மகன் லட்சுமணன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.1046/2021 இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 352, 324,506(2) ன் கீழ் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

மேற்படி காவல் ஆய்வாளர் திரு. கருணாநிதி இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 18.00 மணியளவில் சம்பவ இடமான அன்னவாசல் ஊராட்சி மன்ற தொடக்க பள்ளி அருகே சென்று சாட்சிகள் குமார் மற்றும் கணேசன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வர எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் பகலவன், பாபு ஆகியோர்கள் குடவாசல் பஸ் ஸ்டான்ட் அருகே நின்று கொண்டிருந்தவரை அன்றைய தினமே 19.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்கு கோப்பினை காவல் நிலைய வசத்திலேயே வைத்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட திரு.ராஜ் என்பவர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதியிடம் கூறிய அதே சங்கதிகளே கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட லட்சுமணன், கௌதமன், குமரகுரு ஆகியோர்ளுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் மற்றும் காயம்பட்ட கௌதமன் மற்றும் குமரகுரு ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்தும், காயம்பட்ட லட்சுமணன் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த குடவாசல் அரசு மருத்தவமனை மருத்துவர் திரு. மணிவண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார். **(கௌதமன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை அ.சாஆ. 10 ஆகவும், குமரகுரு என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை அ.சாஆ. 11 ஆகவும், லெட்சுமணன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சாஆ. 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயம்பட்ட கௌதமன் மற்றும் குமரகுரு ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார். மேலும், இவ்வழக்கில் காயம்பட்ட லட்சுமணன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக பரிந்துரை செய்துள்ளார். அந்த பரிந்துரையின் அடிப்படையில் காயம்பட்ட லட்சுமணன் என்பவர் சிகிச்சைக்காக சென்ற அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து மருத்துவ சட்டக் கருத்துரை வழங்கிய திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் திருமதி.நித்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(லட்சுமணன் என்பவருடைய மருத்துவ சட்டக்கருத்துரை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

மேலும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற எதிரிகளான வெங்கடேஷ், பிராபாகரன் ஆகியோர்களை தேடி வந்த நிலையில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை

பெற்று சமூக நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிகாட்டுதலுடன் பிணையில் விடுவிக்கபட்டுள்ளார்கள் என்ற விவரத்தினை தெரிந்து கொண்டுள்ளார். மேலும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட விஷ்ணு மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்கள் இளம்பிழையாளி என்று தெரிய வந்ததால் அவர்களை கையகப்படுத்தி திருவாரூர் இளஞ்சிறார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார்.

மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கமலாநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் ஈடுபட்ட இளம்பிழையாளிகள் விஷ்ணு மற்றும் ஈஸ்வரன் மீது திருவாரூர் இளஞ்சிறார் நீதிகுழுமத்தில் தனிக் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 352, 324, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 06.03.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு செல்லாமல் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஐ எதிரிகள் திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:36:05 +0530

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.